**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 202/2021.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 (பட்டியல் சாட்சி – 1).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சுரேஷ். | ஜாதி | |
| தந்தை பெயர் | கந்தன். | தொழில் | தலைமைக் காவலர். |
| கிராமம் | கொடுவிலார்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 44/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

(1) நான் தற்போது, கொடுவிலார்பட்டியில் குடியிருந்துகொண்டு, தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.03.2021 ஆம் தேதியன்று, சுமார் 02.30 மணியளவில் எனது பெரியப்பா சீனிவாசன் எனக்குப் போன்செய்து, என் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாகத் தகவல் தெரிவித்தார். நான் தேனி அரசு மருத்துவமனை வந்து, மருத்துவரிடம் விசாரித்தபோது, என் அப்பா கந்தனுக்கு பின்னந்தலையில் அடிபட்டதாகவும், மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளதாகவும், நெற்றி, கண், நுரையீரல், கை, கால்களில் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளார் எனக் கூறினார். விபத்து குறித்து சம்பவ இடத்திலிருந்தவர்களிடம் விசாரித்தபோது, சம்பவ தினத்தன்று மதியம் 02.00 மணிக்கு அந்தோணி என்ற நபர் யமஹா இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டும், எனது அப்பா பின்னால் அமர்ந்து கொண்டும் கொடுவிலார்பட்டியிலிருந்து போடிக்கு சென்றதாகவும், கோடாங்கிபட்டி அருகில் உள்ள பூர்ண வித்யா பவன் பள்ளி அருகே போடி கருப்பன் கோவில் தெருவைச் சேர்ந்த பொன்ராம் மகன் நடராஜ் சைக்கில் ஓட்டிக் கொண்டு வந்த நபர் குறுக்கே வந்ததாகவும், யமஹா இருசக்கர வாகனத்தை கட்டுக்குள் கொண்டு வரமுடியாததால் சைக்கிளின் பின்னால் மோதி 3 நபர்களும் கீழே விழுந்து விபத்து

ஏற்பட்டதாகத் தெரிந்துகொண்டேன்.

(2) ஆஜர் எதிரிதான் யமஹா இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்த அந்தோணி என்ற நபர் ஆவார். என் அப்பாவை தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனையிலிருந்து, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். அங்கு 2 நாட்கள் சிகிச்சைக்குப் பின்னர், ன் அப்பா சிகிச்சைப் பலனின்றி இறந்துவிட்டார். சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க நான் புகார் கொடுத்தேன். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்தப் புகார் **அ.சா.ஆ.1** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் குறித்துப போலீசார் என்னிடம் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய, வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால், குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.20 05:55:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**